Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 { ஈரோடு 1-3-1947 மாசி 17உ } மலர் 21

# சென்னையில் திராவிடர் கழக நிதியளிப்பு விழா

## கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம்

### பெரியார் வரவேற்பில் நடந்த சூழ்ச்சி

சென்னையில் 23-2-47ந் தேதி பெரியார் வசம் கழக நிதி அளிக்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தபடியால் பெரியார் ஈரோட்டிலிருந்து 22ந் தேதி நள்ளிரவில் புறப்பட்டு கொச்சின் எக்ஸ்பிரசில் சென்னை வந்து சேர்ந்தார்

கொச்சின் எக்ஸ்பிரஸ் வண்டி சாதாரணமாகக் கால அட்டவணைப்படிக் காலை 10-5 மணிக்கு சென்னை வரவேண்டியதாகும். இந்த நேரத்தை அனுசரித்துச் சென்னை மாவட்ட திராவிடர் கழகப் பிரமுகர்கள் இரயில் மேடையில் பெரியாருக்கு ஒரு கருப்புச்சட்டைப்படை வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். சுமார் 1000 கருப்புச்சட்டைத் தொண்டர்கள் கழகத்தில் வந்து கூடி, இரயில் வரும் நேரத்துக்கு ஸ்டேஷன் வந்து சேர்வதற்குக் காத்துக்கொண்டிருந்தார்கள். மற்றும் இயக்கத் தோழர்களும் ஏராளமாய் மேடைவர புறப்பட்டுக்கொண்டு இருந்தார்கள். பெரியாரை அழைத்துச்செல்ல கார் ஒன்று அலங்காரம் செய்யப்பட்டுத் திராவிட மறுமலர்ச்சி நாடகசபை உரிமையாளர் தோழர் நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் ஓட்டிக்கொண்டு வந்துகொண்டு இருக்கிறார்,

இந்த நிலையில் கொச்சின் எக்ஸ்பிரஸ் 10 மணி 5 நிமிஷத்துக்கு வரவேண்டியது அரக்கோணம்வரை சரியான காலத்துக்கு வந்தது.

அரக்கோணத்தில் இருந்து விரட்டி வேகமாய் ஓட்டப்பட்டுச் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு 9-25க்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டு எக்ஸ்பிரசின் மற்ற அறைகளைக் கூடத் திறக்கவிடாதபடிப் பூட்டி, பெரியார் வந்த அறையை மாத்திரம் திறந்து, சுமார் 100 பேர்களுக்கு மேற்பட்ட போலீஸ் சேவகர்களும் சுமார் 20 பேர்கள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், சார்ஜண்ட், எட்டுகளுமாகப் பெரியாரைச் சூழ்ந்து கொண்டு, தள்ளிக்கொண்டே வெளியில் கொண்டுவந்து விட்டுவிட்டார்கள். ஸ்டேஷனைவிட்டுப் பெரியார் வெளியில் வந்த பிறகே சில தோழர்கள் வந்து "இன்னும் தலைவர்கள் வரவில்லை, கார் அலங்காரம் செய்யப்பட்டு வந்துகொண்டு இருக்கிறது, கருப்புச்சட்டைப் படைத் தொண்டர்கள் அணிவகுத்து வந்துகொண்டிருக்கிறார்கள், சற்றுப்பொறுங்கள். வண்டி 40 நிமிஷத்துக்கு முன்னால் வந்து விட்டதால் யாருமே மேடைக்கும் வரவேற்பக்கும் வரமுடியாமல் போய் விட்டது" என்று வணக்கமாகச் சொன்னார்கள்.

அங்கிருந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒரு சார்ஜண்டுக்குக் கட்டளை இட்டு ஒரு டாக்ஸி கார் பிடித்துவரச் சொல்லிவிட்டுப் பெரியாரைப்பார்த்து "தயவுசெய்து புறப்பட்டுவிடுங்கள், ஸ்டேஷனில் ஏராளமான கூட்டம் வந்துவிடும். சமாளிக்க முடியாமல் போய்விடும். பிரயாணிகளும் இன்னும் இறங்காமல் இருக்கிறார்கள்" என்று சொல்லி, டாக்ஸி கார் கதவைத் திறந்து அதில் ஏறும்படிக் கையைக் காட்டினார். பெரியார் சிரித்துக் கொண்டே கார் ஏறி, தனது ஜாகைக்குக் காரை விடச்சொல்லி உடனே புறப்பட்டு விட்டார்.

பிறகு 10 மணி சுமாருக்குச் பதினாயிரக்கணக்கான மக்கள் இரயிலுக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிவிட்டார்கள் என்றாலும் கூட்டம் கூட்டமாக டவுன்ரோட்டிலுள்ள பெரியார் ஜாகைக்கு மக்கள் வந்து பார்த்து விட்டுப்போனார்கள்.

இதன் காரணமாக மாலை 4 மணிக்குப் பீபிள்ஸ் பார்க்கிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊர்வலம் சமாளிக்க முடியாத கூட்டமாக ஆகிவிட்டதுடன், ஊர்வலமாகப் பீபிள்ஸ் பார்க்கு, புரசைவாக்கம், பூந்தமல்லி ரோடு பெரியமேடு சிந்தாதிரிப்பேட்டை, மவுண்ரோடு, வாலாஜா ரோடு, திருவல்லிக்கேணி ஹைரோடு பைகிராப்ட்ஸ் ரோடு ஆகியவற்றின் வழியாகச் சுமார் 3 மைல்களுக்குமேல் திருவல்லிக்கேணி கடற்கரைக்கு 1000க்கு மேற்பட்ட கருப்புச்சட்டைத் தொண்டர்களும் 7, 8 ஆயிரம் பொதுமக்களும், பெரிதும் பெண்களும் மூஸ்லிம் தோழர்களுமாகத் தொடர்ந்து சேர்ந்தனர். வழியில் நெடுக பலப் பெண்களும் குழந்தைகளும் உள்பட ஏராளமான பேர்கள் பூ மாலை, ரூட்டபுறால், துணி மாலை, கனிகள் ஆகியவை அணிவித்து ஆரவாரம் செய்துகொண்டே வந்தார்கள்.

கூட்டம் கடற்கரை வந்தது. எற்கனவே சுமார் 20, 30 ஆயிரம் மக்கள் கடற்கரையில் ஒரு மைல் நீளத்துக்கு மறைத்துக்கொண்டு நின்ற வண்ணம் கூடி இருந்தார்கள்.

பெரியார் பெருத்த வாழ்த்தொலிக்கிடையே மேடை ஏறி அமர்ந்ததும் பெரியாரின் இருமருங்கிலும் தோழர்கள் எஸ் முத்தையா முதலியார் அவர்களும் திருவொத்தியூர் டி. ஷண்முகம் அவர்களும், தோழர் எம். ஆர். இராதா அவர்களும் அமர்ந்திருக்கக் கூட்டம் துவக்கப்பட்டது. தோழர் கோவிந்தசாமி தோழர் நடராஜனைத் தலைமைவகிக்கப் பிரேரேபித்தார். தோழர் அரசு ஆதரித்தார். நடராஜன் அவர்கள் தலைமைவகித்து ஊர்வலத்தை நடத்திய தோழர் வி. ஜயசந்திரன் அவர்களுக்கும், சாரத்திய நடத்திவந்த ராதா அவர்களுக்கும் நன்றி செலுத்திவிட்டு, அவர்களைச் சில பாராட்டு உரைகள் கூறும்படிச் செய்துவிட்டு, தலைவர் நடராஜன் அவர்கள் சில வார்த்தைகள் கூறி சென்னை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் தோழர் அரசு அவர்கள் 'தலைவருக்கு நிதி அளிப்பார்' என்று கூறி அமர்ந்தார். உடனே தோழர் அரசு அவர்கள் நிதி வசூல் விபரத்தை விளக்கி இப்போது முதல் தவணையாக 5000 ரூபாய் கொடுப்பதாகவும், இனியும் சென்னை நகரத்துக்காக 5000 ரூபாய்க்குக் குறையாமல் சீக்கிரத்தில் அளிக்கப்படும் என்று கூறி 5000 ரூபாய் அதாவது முன் பெரியாரிடம் கொடுத்துவைத்த 1000 ரூபாயும் சேர்த்து ஒரு செக்காகக் கொடுத்தார். பிறகு தோழர் முத்தையா முதலியார், தோழர்கள் கோவிந்தசாமி, ஜனார்த்தனம், ஜீவரத்தினம் ஆகியவர்கள் பேசினார்கள்.

பிறகு பெரியார் 'உடல்நிலை சரியில்லாமல் சளிப்பிடித்து, ஜலிப்பாய் இருப்பதுடன் மார்வலியுடன் பேசுகிறேன்' என்றும் 'இப்போதுதான் ஆஸ்பத்திரி சிகிச்சையில் இருந்து வருகிறேன்' என்றும் 'கூறிவிட்டு சுமார் ஒன்றே முக்கால் மணிநேரம் வரை பேசினார்.

## அனுதாபம்

19-2-47ல் திருவண்ணாமலை தாலுக்காவைச் சேர்ந்த கீக்களூர் திராவிடர் கழக, கருஞ்சட்டைப்படை உறுப்பினர் தோழர் எஸ். ராமச்சந்திரன் தமது 22வது வயதில் நோய்வாய்ப்பட்டு இயற்கையெய்தினார். அன்னார் குடும்பத்தாருக்கு கீக்களூர் திராவிடர் கழகத்தின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## தமிழ் சித்த வைத்திய மாநாடு

23-2-47ல் திருச்சியில் கூடிய திருச்சி ஜில்லா சித்தவைத்திய சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் 29, 30-3-47 தேதிகளில் லால்குடியில் சித்தவைத்திய மாநாடு நடத்துவதென்றும், அதற்குச் சென்னை சுகாதார மந்திரியாரைத் தலைமை வைக்கச் செய்வதென்றும் முடிவு செய்ததாகவும், அதையொட்டி ஒரு உபசாரணைக்கமிட்டி நிறுவப்பட்டதாகவும் தோழர் சி. சோமசுந்தரம் அறிவிக்கிறார்.

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

9-2-47ல் தாரமங்கலம் தோழர் ஆனை. ரா. மாரிமுத்து அவர்கள் மகன் தோழர் டி. எம். சுப்பிரமணியனுக்கும் ஷியூர் தோழர் டி.எஸ்.எஸ். மணியன் அவர்கள் தங்கை மாரியம்மாளுக்கும் தாரமங்கலத்தில் தோழர் டி. எ. கேசவன் அவர்கள் இல்லத்தில் தோழர் ப. கண்ணன் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அஞ்ஞான்று சேலம் கல்லூரி மாணவர் தோழர் வி. எஸ். குழந்தைசாமி அவர்களும் மற்றும் பலரும் சீர்திருத்த மணங்குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள். அதன் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு 2 ரூபாய் நன்கொடையளித்தனர்.

0 0

சாத்தூர் வட்டாரம் கிராமாந்திர கருப்புசட்டைத் தலைவர் ஆலம்பட்டி பாலையா அவர்களுக்கு வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.


வெளி வந்துவிட்டது! விற்பனைக்குத் தயார்!

# இராவண காவியம்

ஆசிரியர்:—குழந்தை.

சிறப்புப்பாயிரம்—கவி பாரதிதாசன் அவர்கள்.

7-பக்க ஆராய்ச்சி

முன்னுரை—தளபதி, அண்ணாதுரை எம். ஏ. அவர்கள்

இராம இராவணப்போர்—ஆரியர் தமிழர் போர் எனும் உண்மை கூறி, இராமாயணத்தால் தமிழர்க்குண்டாகிய இழிவைப்போக்கி, இனவுணர்ச்சியூட்டும் சமயச் சார்பற்ற தமிழ்ப் பெருங்காவியம்.

'நான் படித்தறியும்படி பாட்டுக்கள் எளிதாக இருக்கவேண்டும்'' என்ற பெரியார் ஈ. வெ. ரா. சொற்படி அமைந்த எளிய இனிய 2828 தனித்தமிழ் விருத்தப்பாக்கள். டிம்மி 520 பக்கம்.

உயர்ந்தபதிப்பு, காலிக்கோ பைண்ட், கண்கவர் அட்டை, விற்பனையாவர்க்குத் தக்க கழிவுண்டு. தனிப்பிரதிக்குத் தபால் கூலி 10-அணா.

விலை ரூ. 6.

கிடைக்குமிடம்:-

சிவலிங்க விலாச புத்தகசாலை, ஈரோடு.



## திராவிடப் புரட்சிச் சின்னங்கள்

சுத்த வெள்ளி இனாமலில் பேஜ் ஜாடிகள், கொடிகள், வட்டம், ஓவல், இரட்டை, ஒத்தையில் சின்னம் பெரிது. இவைகளில் 6 விதமும், நெஞ்சு பட்டன்கள் 4 விதமும், கப்பு பட்டன்களும் உண்டு தேவைக்கு,

N. R. சாமி Co.,
திராவிடப் புரட்சிச்
சின்னம் தயாரிப்போன்,
3வ செ. வீதி, காரைக்குடி.


ரோஜா முத்தையா

# கிருஷ்ணன்—பாகவதர் அப்பீல் மனு விசாரணை

லண்டன், பிப். 24—

லட்சுமிகாந்தம் கொலைவழக்கில் ஜன்ம தண்டனை அடைந்துள்ள நகைச்சுவைஅரசர் என். எஸ். கிருஷ்ணன், இசைவாணர் எம். கே. தியாகராஜ பாகவதர் ஆகியவர்களின் அப்பீல் விசாரணை இன்று லண்டன் பிரிவி கவுன்சிலில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பீல்தாரர் சார்பில் டி. என். பிரிட் வழக்கின் விவரத்தை எடுத்துரைத்தார்.

இவர்களுக்குக் கீழ்க்கோர்ட்டார் அளித்த ஜன்ம தண்டனையை எதிர்த்து ஹைகோர்ட்டில் செய்திருந்த அப்பீல் டிஸ்மிஸ் செய்யப்பட்டதின் பேரிலேயே பிரிவி கவுன்சிலுக்கு இவர்கள் செய்திருந்த அப்பீல் கடைசியாக இன்றுதான் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதிகளாக, லார்ட் தாங்கர்டன், லார்ட் உத்வர்ட், ஜஸ்டிஸ் டுபார்க், ஸர் ஜான்பியுமான்ட் அமர்ந்தனர்.

## தோழர் பிரிட்டின் வாதம்

கிருஷ்ணன்—பாகவதர் சார்பில் ஆஜரான தோழர் டி. என் பிரிட் தமது வாதத்தில் பின்வருமாறு கூறினார்:-

"இக்கொலை வழக்கில் 10பேர் சம்பந்தப்பட்டதாகவும், 8 பேர் கொலையில் சம்பந்தப்பட்டவர்களென்றும் கொலைக்கு உடந்தையாக கிருஷ்ணன்—பாகவதர் இருந்தனர் என்பதும் குற்றச்சாட்டு. ஆனால் கொலை நடந்த இடத்தில் இவர்கள் இருந்ததாகக் கூறப்படவில்லை.

கிருஷ்ணன்—பாகவதர் இருவரும் தென்னாட்டின் பிரசித்திபெற்ற நடிகர்கள், நல்ல புகழும், கௌரவமும் வாய்ந்தவர்களாவர். இவர்களின் வழக்கு முடிவடையாமலிருக்கிறது. சென்னை ஹைகோர்ட்டாரும் இவர்களுக்கு அப்பீல்செய்ய அனுமதி அளித்துள்ளார்கள்.

இருவரின் வழக்கு விவரமும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படவில்லை கொலை, சதி நடந்த சமயங்களில் வேறிடத்திலிருந்தார் என்பதற்கு கிருஷ்ணனுக்கு மட்டும் தக்க சாட்சியம் இருக்கிறது. இதைத்தவிர மற்ற விவரங்கள் இருவருக்கும் ஒரேவிதம் தான்.

சென்னை ஹைகோர்ட்டில் ஜூரிகள் முன்னிலையில் இவர்களின் விசாரணை சாதாரண கிரிமினல் சட்டத்துக்கு உட்பட்ட வழக்காக நடந்தது. இந்த விசாரணையில் தண்டிக்கப்பட்ட அனைவரும் சென்னை ஹைகோர்ட்டைச் சார்ந்த அப்பீல் கோர்ட்டில் தங்களின் தண்டனையை எதிர்த்து அப்பீல்செய்தனர். ஆனால் டிஸ்மிஸ் செய்யப்பட்டன.

## மூன்று முக்கிய பிரச்னைகள்

1) அதாவது ஹைகோர்ட்டின் தண்டனையை எதிர்த்து வரும் அப்பீல்மீது, ஹைகோர்ட் எப்படி நடந்துகொள்வது என்பது

(2) எதிரிகளில் ஒருவரின் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வாக்குமூலத்தையே ஒப்புக்கொள்ளுவதா என்பது.

(3) இக்கொலையில் சம்பந்தப்பட்ட ஒரு அப்ரூவரின் சாட்சியத்தை எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது.

## வழக்கின் வரலாறு

1944 நவம்பர் 8ந்தேதி காலை சென்னையின் ஒரு தெருவில் லட்சுமிகாந்தம் என்பவன் ரிக்ஷாவில் செல்லுகையில் வண்டியைக் கவிழ்த்துக் கத்தியால் குத்தப்பட்டான் என்பது. லட்சுமிகாந்தம் நடவடிக்கைகள் மோசமானவை, சென்னையில் யாராவது கொலைக்கு ஆளாக நேரிடுமென்றால், இவர்தான் அதற்கு உள்ளாகக்கூடும். லட்சுமிகாந்தம் என்பவன் படுமோசமான ரகத்தைச் சார்ந்த பத்திரிகைக்காரன். மற்றவர்களை அவதூறாகத் தாக்கி எழுதும் தொழிலில் ஈடுபட்டிருந்த பேர்வழி. இம்மாதிரி இங்கிலாந்தில் யாராவது முகிவிருந்தால் உடனே அக்கயோரைச் சிறைக்கு அனுப்பி இருப்பார்கள் அதிகாரிகள். ஆனால் சென்

(தொடர்ச்சி 6-பக்கம்)

## செலக்ட் புக்ஸ்டால்

அன்புடையீர்! வணக்கம். எதிர்பாராத நேரிட்ட சில கோளாறுகளால் மேற்கண்ட பெயருள்ள எனது புத்தக வியாபார நிலையத்தின் தொழில் சிறிதுகாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்சமயம் மீண்டும் முன்போலவே வியாபாரத்தைத் தொடங்கியுள்ளேன் என்பதைத் தோழர்கட்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் புதிய நூல்கள் பல வெளியிடப்படும். குறிப்பு:-எம்மிடம் பெரியார் ஈ. வெ ரா., சி. என். அ, நெடுஞ்செழியன், கவிஞர், செல்வம், பாகவதர் முதலியோர் போட்டோ படங்களும், தலைவர்கள் படங்களுடன் கூடிய லெட்டர்பேடு, கவர், திராவிடநாட்டுக் குறிப்பு மற்றும் இயக்க வெளியீடுகளும் விற்பனைக்கு கிடைக்கும். போட்டோ படம் ¼ சைஸ் விலை 8அணா, கார்டு சைஸ் 12 அணா, ½ காபினெட் சைஸ் ரூ. 1-4-0. முழு சைஸ் ரூ. 2. லட்டர் பேடு 100 பக்கங்கள் கொண்டது ரூ. 1-8-0. கவர் 100 ரூ. 2. கழகக் குறிப்பு 10 அணா. சி. என். அ அவர்களின் 'திராவிடர் நிலை' புத்தகம் விலை 6 அணா. வியாபாரிகட்கு 20% கமிஷன். தமிழகம் இழந்த தன்பதி புத்தகம் விலை அணா 0-4-0. தேவைக்கு 3ல் 1பங்கு முன்பணத்துடன் ஆர்டர் செய்யவும். தபால் செலவு பிரத்தியேகம். அன்பர்கள் தங்கள் ஆதரவை முன்போலவே கொடுத்துதவ வேண்டுகிறேன்.

R. துரைசாமி, செலக்ட் புக்ஸ்டால்,
142, கச்சேரி வீதி, ஈரோடு.

குடி அரசு

1947 ௵ மார்ச் ௴ 1௳

# சீப்பை மறைத்துவிட்டால் போதுமா?

23-2-47 காலை 10-5 மணிக்குச் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வரவேண்டிய கொச்சி எக்ஸ்பிரஸ் வண்டி 45 நிமிஷம் முன்னதாகவே, அதாவது 9-20க்கு வந்து சேர்ந்தது. ஈரோட்டை விட்டு சரியான நேரத்திற்கே வந்துகொண்டிருந்த வண்டி இப்படித் திடீர் துரிதத்துடன், 45 நிமிஷம் முன்னதாகவே சென்னை வந்து சேரவேண்டிய அவசியமென்ன என்பதைப்பற்றிப் பல இடங்களில் விசாரித்தோம். என்றுமில்லாத முறையில் அவ்வளவு போலீசார் ஸ்டேஷன் ப்ளேட்பாரத்தில் அணிவகுத்து நிற்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும் கேட்டுப் பார்த்தோம். காங்கரஸ்காரர் கூட்டத்திற்குத்தான் இப்போது அதிகப் போலீஸ் உதவி சேவையாயிருக்கிறது! முதன் மந்திரி ஸ்டேஷனுக்கு வரும்போதுதான் போலீஸ்படை அணிவகுத்து நிற்க வேண்டியிருக்கிறது! எதிர்க் கட்சிக்காரர்கள் தலையிடாமலிருப்பதற்கல்ல. காங்கரஸ்காரர்களே ஒருவருக்கொருவர் தாக்கிக்கொள்வதையும், எம். எல். ஏக்கள் ஒருவரையொருவர் அடிப்பதையும் தடுப்பதற்காக!

ஆனால் பெரியாரவர்கள் வருகைக்குப் போலீஸ் தேவையில்லை. எதிர்க்கட்சிக்காரர்கள் அவர் வருகையை எதிர்ப்பதுமில்லை. திராவிடர் கழகத்தாருக்குள் (காங்கரஸ்காரரைப் போல) அடிதடி ஏற்படும் நிலைமையுமில்லை. போலீசார் அணிவகுத்து நின்றது மட்டுமல்ல, பிரயாணிகளை இறங்கவிடாமல் தடுத்ததும், உடனே மோட்டாரில் ஏறும்படியாகப் பெரியாரை அவசரப்படுத்தியதும் விபரீதமான செயல்கள்!

எல்லா ஏற்பாடுகளும் ஒரே ஒரு நோக்கத்தைக் கொண்டுதான்! பெரியார் வரவேற்பைச் சிறிதாக்கவேண்டும்! அவ்வளவேதான்! ஆயிரக்கணக்கான மக்கள் ஏமாந்துபோயினர் என்பது உண்மைதான். இந்த முயற்சி போலீசாரின் சர்வாதிகாரமா அல்லது மேலிடத்துக் கட்டளையா, தெரியவில்லை.

எப்படியானாலும் சரி, கவலையில்லை. எந்த முறையைக் கையாண்டேனும் எதிர்க்கட்சிகளை ஒடுக்கிவிடுவது என்பதுதான் இன்றைய ஆட்சியின் ஏற்பாடு. சென்னையில் இந்த முறை! அதாவது, வேண்டாத திருமணத்தை நிறுத்துவதற்காக மணப்பெண்ணின் சீப்பை எடுத்து ஒளித்துவைத்துக்கொள்ளும் சிறுபிள்ளைத்தனம்! பணப்பெட்டியைத் திருட்டுக் கொடுத்துவிட்டு, "சாவிதான் என்னிடம் இருக்கிறதே" என்றானாம், ஒரு சோணகிரி! வரவேற்புக் கூட்டத்தைச் சிறிதாக்கிவிட்டால் திராவிடர் கழகப் பிரசாரமோ, பெரியார் தொண்டோ மறைந்துபோகுமா? நிகழ்ந்தது என்ன?

மாலையில் நூற்றுக்கணக்கான கருஞ்சட்டைத் தோழர்கள் அணிவகுத்துச் சென்ற மாபெரும் ஊர்வலம்! கடற்கரைக் கூட்டத்தில் பதினாயிரக்கணக்கான பொதுமக்கள்! சென்னைப் ப[illegible]தொகையைக் காட்டிலும் அதிகமான பிரதிபலிப்பு! அதுவும் ஒரே மாதத் தீவிர முயற்சியில்!

காங்கரஸ் ஆட்சியில் பிரஜா உரிமை லட்சணம் எப்படியிருக்கிறது என்பதற்கு அவசரச்சட்டம் தலைசிறந்த எடுத்துக்காட்டு! சாணக்கிய தந்திரம் எந்த அளவிலிருக்கிறது என்பதற்குக் கொச்சி எக்ஸ்பிரஸ் வருகை ஓர் எடுத்துக்காட்டு!

இத்துடன் நிற்கிறதா? இல்லை. அடக்குமுறைவேட்டை நாயையும் பெரியார்மீது ஏவி விட்டிருக்கிறது, காருண்யமுள்ள காங்கரஸ் சர்க்கார்! திருநெல்வேலி வட்டாரத்தில் முன்பு போட்ட 144 உத்திரவை மீண்டும் நீட்டி, மார்ச்சு மாதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுற்றுப்பிரயாணத்தையும் தடுத்துவிட்டார்கள், அதிகாரவர்க்கத்தார்.

திராவிடர் கழகத்தின்மீது எவ்வளவு அச்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதாகவே இதை எடுத்துக்காட்டுகின்றோம். திராவிட இன உணர்ச்சியானது காங்கரஸ்காரர்களுக்குள்ளாகவே, ஏன், சட்டசபை உறுப்பினர்களுக்குள்ளாகவே, ஏன், மந்திரிகளுக்குள்ளாகவே தோன்றியிருப்பதைக்காணச் சகிக்கவில்லை, பிரகாசம் சர்க்காருக்கு!

அதுமட்டுமல்ல. அவர்களிடையே ஏற்பட்டிருக்கும் பூசல்கள், சச்சரவுகள், பதவிவேட்டைக் குஸ்திகள், லஞ்ச ஊழல்கள், மொழிச் சண்டைகள், ஆரிய—திராவிட சிக்கல்கள் ஆகியவற்றையெல்லாம் ஓரளவாவது மறைப்பதற்காகவே இந்த ஏற்பாடு. ஒரு பொது எதிரியை உண்டாக்கிவிட்டால், பிறகு ஒருவிதமான கட்டுப்பாடு தற்காலிகமாகவேனும் ஏற்படாதா என்பதுதான் பிரகாசம் காருவின் கனவு. "நமக்குள் சண்டை ஏன்? அதோ பார்! திராவிடர் கழகத்தார்! அவர்களை அடக்குவோம் வாருங்கள்!" என்று ஒரு கும்பல் மற்றொரு கும்பலுக்குச் சொல்லிக்கொள்ளலாம் அல்

# பெரியார் உடல் நிலை

பெரியார் அவர்களுக்கு 27-2-47 முதல் 102 டிகிரி ஜுரமும், சளியும் நெஞ்சுவலியும் இருந்து வருகின்றன. அநேகமாக இன்று சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படலாம். டாக்டர் சடகோபன் அவர்கள் பெரியார் உடல்நிலையைப் பரிசோதித்துவிட்டு, பெரியார் ஒரு வாரமாவது ஓய்வெடுக்க வேண்டுமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். இதனால் 2-3-47ல் நடைபெறவேண்டிய திருச்சி நிதிக்கூட்டத்திற்குச் செல்வது நிறுத்தப்பட்டுவிட்டது.

---

லவா! "பொது எதிரி" என்ற ஒன்றின்மீதுதானே காங்கரஸ் கட்டிடமே கட்டப்பட்டது! இதுவரையில் "அன்னியர்களை" "வெள்ளையர்" என்ற கூச்சல் உதவியாயிருந்தது! இந்தக் கூச்சலினால் இந்தப் பதவிவேட்டைக் கும்பலுக்குள்ளிருந்த சாக்கடை நாற்றம் வெளிப்படாமலிருந்தது! இனி அந்தக் கூச்சலைக்கண்டு பொதுமக்கள் ஏமாரமாட்டார்கள்.

ஆகையால், இனிமேல், "அதோ பார்! கம்யூனிஸ்ட்கள் தொல்லை! இதோ பார்! திராவிடர்கழகத்தார் கிளர்ச்சி! இங்கே பார்! தொழிலாளர் குமுறல்! அங்கே பார், உழவர்கள் உறுமல்!" என்று புதிய புதிய கூச்சல்களைக் கிளப்பிவிட்டால்தான் காங்கரஸ் உயிருடன் இருக்க முடியும்.

ஆனால், ஒன்று கூறுகிறோம். காங்கரஸ் பத்திரிகைகளை நம்பியோ, ரேடியோ பிரசாரத்தை நம்பியோ, திராவிடர் கழகம் உயிர்பெற்றிருக்கவேண்டிய நிலையில் இன்று இல்லை. நம் கழகத்தின் தத்துவமும், லட்சியமும் திராவிடர்களின் இரத்தத்திலேயே கலந்திருக்கிறது. அதை நிலைநாட்டும் வேலை

## காங்கரஸ் ஆட்சியின் யோக்கியம்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சென்றமாதம் திருநெல்வேலி ஜில்லா சுற்றுப்பிரயாணத்திட்டத்தை தூத்துக்குடியிலும் கோவில்பட்டியிலும் 144 போட்டு தடுத்துவிட்டசேதி பார்ப்பனப் பத்திரிகைகளும், பார்ப்பனர்களின் அடிமைப் பத்திரிகைகளும் வெளியிடாமல் மறைத்து இருந்தாலும் பொதுமக்கள் அறிந்ததேயாகும்.

இதன் தன்மைகளையும் அதில் அதிகாரிகள் நடந்துகொண்ட முட்டாள்தனத்தையும் எதேச்சாதிகாரத்தையும் பெரியார் 23-2-57ந் தேதி சென்னைக் கடற்கரையில் 30 000 பேர்கள் மத்தியில் விளக்கினார்.

ஆனால் காங்கரசின் இந்த எதேச்சாதிகார அடக்குமுறை ஆட்சி அத்துடன் நின்றுபோகவில்லை.

முன்னைய 144 உத்தரவு உள்ளபோது திரும்பிவிட்ட பெரியார் அவ்வூர் மக்களுக்கு வாக்களித்துவிட்டு வந்திருந்தபடி மார்ச்சுமாதம் 2வது வாரத்திலிருந்து மார்ச்சுமாதம் முழுவதும் அடியிற்கண்டபடிச் சுற்றுப்பிரயாணத் திட்டம்போட்டு சம்பந்தப்பட்ட இடங்களுக்கு திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் தெரிவித்து ஏற்பாடுகள் செய்யத் தொடங்கி இருக்கும் விஷயம் தெரிந்து, சர்க்கார் மறுபடியும் அதே மாதிரி 144 உத்திரவுபோட்டு தடுத்து இருக்கிறார்கள். இது வேண்டுமென்றே திராவிட கழகத்தாரை வம்புக்கு இழுக்கும் சிறுமைக் குணம் என்பதல்லாமல் வேறு ஒன்றும் சொல்லுவதற்கில்லை. இருந்தாலும் பொதுமக்கள் இதை உணர்ந்திருக்கவேண்டும் என்பதற்கு ஆகவே இதை எழுதுகிறோம். ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுற்றுப் பிரயாணத் திட்ட விபரம்:-

9-3-47 தூத்துக்குடி, 10 புளியம்புத்தூர், 11 குளத்தூர், 12 கீழஈரால், 13 கடம்பூர், 14 பாளையங்கோட்டை (அம்பிகாபுரம்) 15 காயல்பட்டினம், 16 கல்லிடைக்குறிச்சி, 17 கடையநல்லூர், 18 (ஓய்வு) தூத்துக்குடி, 19-3-47 கோவில்பட்டி.

இந்தத் தகவல் தெரிந்த பிறகே பெரியார் தமது சுற்றுப் பிரயாணத் திட்டத்தை மாற்றி வெளியிடநேர்ந்தது. "விடுதலை"

---

தான் நாம் செய்துவரும் வேலை.

இந்த வேலையைத் தடுப்பதற்காக அற்பத்தனமான முறைகளைக் கையாண்டால், அடிக்க அடிக்க அதிகமாய் எழும்பும் ரப்பர் பந்து போலவே காட்சிதரும் நமது கழகம். இந்தக் காட்சியைக் காண்பதற்கு ஆசையாயிருக்கிறதா, அதிகாரவர்க்கத்தாருக்கு, என்று கேட்கிறோம்.

---

## விற்பனைக்குத் தயார்!

எங்களிடம் 'குடி அரசு' பத்திரிகைகளை ஒவ்வொரு வருடமும் தனித்தனியாக பைண்டு செய்த, அதாவது 4வது வருடம் முதல் 5, 6, 7, 8, 9, 11, 12, 13, 15, 17, 18, 19வது வருடம் வரையில் உள்ள வால்யூம்கள் விற்பனைக்குத் தயாரில் இருக்கின்றன. ஒவ்வொன்றின் விலை ரூ. 7-8-0 சொற்ப வால்யூம்களே கைவசம் இருப்பதால், பாதித்தொகை முன் பணத்துடன் தேவைக்கு ஆர்டர் கொடுக்கவும். வால்யூம்களை இரயில்வே பார்சல் மூலம் பெற்றுக்கொள்ள வசதி உள்ளவர்களுக்குச் செலவு குறையும்.

குறிப்பு:- 16வது வருட குடி அரசு பைண்டு வால்யூம் மட்டும் நான்கு மாதங்கள் கொண்டதாக இருப்பதால் அதன் விலை ரூ 3-0-0.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லை இவருக்கு வேறுவிதத்தில் நாசத்தைச் செய்துவிட்டது. லட்சுமி காந்தனின் [illegible] எழுதுவதற்கு உள்ளான பலரில் அப்பீல்தாரர் இருவரும் இருக்கிறார்கள்.

### மோசமான சாட்சியங்கள்

கிருஷ்ணன்—பாகவதர் மீதுள்ள சாட்சியங்கள், அளவில் மிகக் குறைவு ஆனால் தன்மையிலோ மிக மோசமானதாகும்.

சென்னை நீதிபதி எல்லா எதிரிகளுக்கும் ஜன்ம தண்டனையென்று ஒரே மாதிரியாகக்கொடுத்தார். இவர்கள் இருவர்களுக்கு மட்டும் மரண தண்டனையும், மற்றவர்களுக்கு அதைவிடச் சிறுக் குறைவான தண்டனையும்தான் கிடைக்குமென்று எவரும் கருதும்படியாக இருந்தது.

கி. பி. கோ. 411வது பிரிவுதான் இவ்வப்பீலில் பிரச்னையாக விளங்குகிறது. இந்தப் பிரிவு 1943ல் ஒரு திருத்தமாக வந்தது. அப்பீலை ஹைகோர்ட்டு எவ்வவிதமாக நடத்தவேண்டும் என்பதுபற்றி இருவித அபிப்பிராயங்கள் இதில் இருக்கின்றன.

ஹைகோர்ட் இவர்களின் அப்பீலைக் [illegible] தவறு என்று [illegible] சாட்சியங்களை விரிவாக மறு விசாரணைசெய்ய ஹைகோர்ட்டுக்கு அதிகாரமிருக்கிறது. ஜூரிகளின் முடிவைக்கூட மறு விசாரணை செய்யவும் ஹைகோர்ட்டுக்கு அதிகாரமிருக்கிறது. இவைகளை யெல்லாம் ஆராய்ந்த பின்னரே எதிரிமீது குற்றம் உண்டா, இல்லையா என்பதைத் தீர்மானித்திருக்கலாம்.

### ஜெயானந்தம் வாக்குமூலம்

அப்பீலின்போது ஜூரிகள் தீர்ப்பை ஒதுக்கிவைக்க முடியாது என்று ஹைகோர்ட் கூறியது. கிருஷ்ணன்—பாகவதர் மீதுள்ள சாட்சியங்களின் தன்மையைப் பூராவும் பார்க்கும்படி நான் நீதிபதிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதுமாத்திரமல்ல; இவ்வழக்கில் அடங்கியுள்ள சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளக் கூடுமா, கூடாதா என்ற பிரச்னை வேறு இருக்கிறது. வழக்கைச் சரியாக ஜூரிகளுக்கு எடுத்துக் காட்டவில்லை என்பதைக் காட்டச் சாட்சியங்களைப் பார்க்கவேண்டியது மிக அவசியமாகிறது.

ஜெயானந்தனின் வாக்குமூலத்தை வழக்கில் சேர்த்திருக்கக் கூடாதென்பது எனது வாதம். ஆனால் அந்த வாக்குமூலத்தை சேர்த்துக் கொண்டதோடல்லாமல் தனது தீர்ப்பிலும் நீதிபதி அதை உபயோகப்படுத்தி இருக்கிறார்.

கமலநாதன் என்பவனின் சாட்சியத்தில் ஒன்றுமே இல்லை என்று நீதிபதியே கூறியிருக்கிறார். அடுத்த சாட்சி ராமண்ணாவுடையது.

சென்னை நீதிபதி மாக்கட்டின் தீர்ப்பிலிருந்து சில பகுதிகளைத் தோழர் டி. என். பிரிட் நீதிபதிகளுக்கு வாசித்துக்காட்டினார். விசாரணை மீண்டும் நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சர்க்கார் சார்பில் ஜி. ஓ ஸ்லேட், டி. எ. கிராண்டு ஆஜராயினர்.

## "தீர்ப்பு பின்னர் சொல்லப்படும்"

லண்டன், பிப். 25—

சென்னையின் பிரசித்திப்பெற்ற நடிகமணிகளான தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராஜ பாகவதர் ஆகியவர்களின் அப்பீல் மனு விவாதம் இன்று பிரிவி கவுன்சிலில் மீண்டும் தொடர்ந்து நடைபெற்றது.

ஜூரிகள் முன்னிலையில் வழக்கு நடந்த விவரங்களையும், ஜூரிகள் முடிவுக்கேற்ப ஹைகோர்ட்டார் தண்டனையை வழங்கியிருக்கும் தன்மையையும் தோழர் பிரிட் எடுத்துரைத்து வாதித்தார்.

### அனுமதிக்க முடியாத சாட்சியம்

"கிருஷ்ணன்—பாகவதர் ஆகிய "இருவரும் கொலைக்கு உடந்தையாகவும், சதி செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது: ஆனால் இக் குற்றத்திற்குப் போதுமான சாட்சியமிருக்கிறதா என்று பார்த்தால் அதுதான் இல்லை. அதோடு உள்ள சாட்சியங்களும் அனுமதிக்க முடியாததாயிருக்கிறது" என்று வக்கீல் பிரிட் வாதித்தார்.

சர்க்கார் சார்பில் தோழர் ஜி. ஓ. ஸ்லேட் வாதிக்கையில்:-

கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பில் போதுமான காரணமிருந்தால் மட்டுமே அப்பீல் கோர்ட் தலையிட முடியும். அதோடு ஜூரிகளின் தீர்ப்பும் சரியானதாயில்லை யென்றால்தான் தலையிடுவார்கள். இவ்வழக்கில் ஜூரிகளின் தீர்ப்புக்குச் சரியான காரணங்கள் இருக்கின்றன என்று ஹைகோர்ட் கருதியதிலேயே மேற்கொண்டு தலையிட ஹைகோர்ட் விரும்பவில்லை. எனவே இந்த அப்பீலை டிஸ்மிஸ் செய்யவேண்டுமென சர்க்கார் கூறுகிறது. ஹைகோர்ட் தீர்ப்பு சரியான முறையிலேயே யிருக்கிறது. அதைச் சரியல்ல என்று சொல்ல ஆதாரமே காட்ட முடியாது" என்று குறிப்பிட்டார்.

### தீர்ப்பு பின்னர்தான்

சட்டப் பிரச்னை சம்பந்தமான இரு தரப்பினருடைய வாதம் முடிந்தவுடன் பிரிவு கவுன்சிலுக்குத் தலைமை வகித்த லார்டு தாங்கார்ட்டன் "நீதிபதிகள் இவ்வப்பீலைக் குறித்து யோசிக்கப் போதிய அவகாசம்வேண்டும். எனவே தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும்" என்று கூறினார்.

### மீண்டும் சென்னை ஹைகோர்ட் தீர்ப்புக்கா?

சென்னை, பிப். 26—

லண்டன் பிரிவி கவுன்சிலில் நடைபெற்றுவரும் கிருஷ்ணன்-பாகவதர் அப்பீல் மனு விசாரணையை மீண்டும் சென்னை ஹைகோர்ட்டில் விசாரிக்க வேண்டுமென்று பிரிவு கவுன்சில் நீதிபதிகள் முடிவு செய்துள்ளார்களென்றும் சென்னை மெயில் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஜூரிகளின் முடிவில் மீண்டும் தலையிட முடியாதென ஹைகோர்ட் கூறியிருப்பதற்கு நீதிபதிகள் விளக்கம் கூறுகையில் "சட்ட சம்பந்தமான பிரச்னைகளை அடிப்படையாக வைத்து இவ்வப்பீலை மீண்டும் ஹைகோர்ட் விசாரிக்கலாமென்றும், ஜூரிகளின் முடிவைப்பற்றி ஆராய வேண்டியதில்லையென்றும் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது" என்றும் 'மெயில்' செய்தியில் கூறப்படுகிறது.

# கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

(15-2-47 குடி அரசின் தொடர்ச்சி)

### வறுமையில் வாடுதல்

இச்சமயத்தில் மார்க்ஸ் மிகக் கொடுமையான வறுமையிலே வாழ்ந்துவந்தார். அவரது குடும்பமும் பெருகலாற்று. இவருக்கு 6 குழந்தைகள் பிறந்தன. அவைகளில் மூன்றுதான் உயிரோடிருந்தன. இவருக்கு நிரந்தரமான வருமானமில்லை. நியூயார்க் டிரிபியூன் என்ற பத்திரிகைக்கு இவர் எழுதிவருகிற கடிதத்திற்கு வந்த வருமானந்தான் நிரந்தரமாயிருந்தது. தரித்திரம் இவரது குடும்பத்தை அடியோடு பிடித்துக் கொண்டது. 1852ல் நடந்த கலோக் பொதுவுடைமை வழக்கைப்பற்றி ஒரு சிறு பிரசுரம் பிரசுரிப்பதற்கு எழுத ஒரு கடிதம் வாங்குவதற்குக்கூட இவரிடம் பணம் இல்லை. அதற்காக தன்னுடைய மழைக் கோட்டைப் பணயம் வைக்கவேண்டியதாயிற்று. துன்பம் வந்தால் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கும் என்றாற்போல் அவருக்கு அதேவருடப் பிரான்சிஸ்கா என்ற குழந்தை இறந்தது. பிணத்தை எடுத்துச் செல்ல சவப்பெட்டி செய்யக் கையில் காசில்லை. இரண்டு பவுன் கடன் வாங்கினார். இந்தச் சமயத்தில் இவருக்கு 4 குழந்தைகளிருந்தன. பத்திரிகைகளுக்கு எழுதியனுப்பிவந்த சிறு வருமானத்தைக்கொண்டு இவர்களைக் காப்பாற்றுவது இவருக்கு மிகக் கஷ்டமாயிருந்தது. ஏஞ்சல்ஸுக்கோ காப்பாற்றவேண்டிய பொறுப்பில்லை. ஆனாலும் இவருக்கும் நிரந்தரமான வருவாயில்லை. இவருக்குச் சொத்திருக்கிறது ஆனால் தகப்பனார் இவர் பொதுவுடைமைவாதியானதினால் உதவிசெய்வதில்லை. உதவி வேண்டுமானால் பொதுவுடைமையை விட்டொழிக்கச்சொன்னார். கடைசியாகத் தன்னுடைய நண்பருடைய நிலைமையைக் கருதியோ என்னவோ தந்தையின் விருப்பத்திற்கு இணங்கினார். இவரது உயிர் பொதுவுடைமை இயக்கத்திலே இருந்தாலும் தனது தந்தையிடம் ஒரு கீழ்ப்படிதலுள்ள மகனாக விளங்கினார்.

இவர் லண்டனைவிட்டுப் புறப்பட்டு தன்னுடைய தகப்பனாருடைய கம்பெனியில் மாஞ்செஸ்டரில் ஒரு உத்தியோகத்தில் அமர்ந்தார். சுமார் 20 வருஷங்கள் வரை ஒருவரையொருவர் சந்திக்கவில்லை. ஆனால் இருவர்களுக்குள்ளும் தவறாமல் கடிதப்போக்குவரத்து மட்டும் நடந்து வந்தது. சமயா சமயங்களில் மார்க்ஸுக்கு பண உதவியுமளித்து வந்தார். அதிகமாக அளிப்பதற்குத் தகப்பனார் இருந்ததால் முடியவில்லை. அப்படி அளித்தும் மார்க்ஸ் வறுமையில் பட்ட துன்பம் செப்பமுடியாது. 1860ல் ஏஞ்சல்ஸ் தந்தை காலமானார். இதன்பின் இவர் மார்க்ஸுக்குத் தவறாமல் உதவியளித்துவர முடிந்தது. தன்னுடைய கூட்டாளியான எர்பென் என்பவரை ஒரு நிலம் வாங்கச் செய்தார். இதனால் மார்க்ஸுக்கு வருடமொன்றுக்கு 350 பவுன் கொடுத்துவர முடிந்தது. இந்தவிதமான ஏற்பாடு செய்தாய்விட்டதென அறிந்தபின்தான் ஏஞ்சல்ஸ் தன்னுடைய கவனத்தைப் புரட்சிக் கொள்கைக்காகவும், புரட்சி ஸ்தாபனங்களுக்காகவும செலுத்தலானார். இந்த நற்செய்தியைக் கேள்வியுற்ற மார்க்ஸ் மனம் குளிர்ந்தது. நன்றாகக் குடிக்க ஆரம்பித்தார்.

(தொடரும்)

## நெல்லை மாவட்ட தோழர்களுக்கு

தோழர்களே! நெல்லை மாவட்ட நிதிக் கோட்டாவை 9-3-47ல் தூத்துக்குடியில் பெரியார் அவர்களிடம் அளிப்பதாகவும், பெரியார் அவர்கள் நெல்லை மாவட்ட சுற்றுப்பிரயாணம் செய்வதாகவும் முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் மீண்டும் தூத்துக்குடியில் (144) தடையுத்தரவு போடப்பட்டுள்ளது ஏனைய இடங்களிலும் (144) தடையுத்திரவு போடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது ஆகவே இச்செய்தி குறித்துப் பெரியார் அவர்களிடம் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தபிறகு மேற்கொண்டு செய்ய வேண்டுவனவற்றை அறிவிக்கிறேன். பெரியார் அவர்களும் என்னை அழைத்துள்ளார்.

கே. வி. கே. சாமி,
செயலாளர்,
தெ. மா. தி. கழகம், தூத்துக்குடி.

## திருச்சி ஜில்லா தாழ்த்தப்பட்டோர் கைத்தறி நெசவாளர் சங்கம்

23-2-47ல் திருச்சி ஜில்லா குதாபஞ்சப்பட்டியில் மேற்படி சங்கப் பொதுக் கூட்டம் தோழர் D. T. ராஜன் அவர்கள் தலைமையில் கூடியது. தற்கால நூல் ரேஷன் கார்டுகள் தாழ்த்தப்பட்டோர்களுக்கு நீதியான முறையில் வழங்கப்படாதது குறித்து மாகாண மந்திரியார்களை 27-2-47ல் பேட்டி காண்பதெனத் தீர்மானித்தது, தந்திமூலம் மந்திரிகளுக்குச் செய்தியறிவிக்கப்பட்டதெனத் தோழர் டி. பெருமாள் (தலைவர்) அறிவிக்கிறார்.

## மதிப்புரை

### இனப்புரட்சி

'இனப்புரட்சி' என்ற மாத வெளியீடு தோழர் வி. நயினான் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டது. தாழ்த்தப்பட்டோரின் இனப்புரட்சியையே குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பெற்றுள்ளது இம்மாத வெளியீடு. அக்குறிக்கோளுக்கேற்ப கட்டுரைகளும், கவிதைகளும், சிறு கதைகளும், இனப்புரட்சியில் தெளிவான முறையில் எழுதப்பெற்றுள்ளன.

இதன் விலை தனிப்பிரதி [illegible] அணா.

கிடைக்குமிடம்:-

'இனப்புரட்சி' காரியாலயம்,
இராசிபுரம், (சேலம் ஜில்லா)

o o

### இராவணன் வித்தியாதரனா?

'இராவணன் வித்தியாதரனா' என்பது பேராசிரியர் வ. சக்கரவர்த்தி M. A., I. E. S., அவர்களால் ஆக்கப்பட்ட ஓர் அரிய ஆராய்ச்சி நூல். இந்நூலில் இராவணன் வித்தியாதரன் என்பது நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. தமிழர்க்கும் ஆரியர்க்கும் நடந்த பெரும் போரே இராமாயணப் போர் என்பது தெளிவுற விளக்கப்பட்டுள்ளது. திராவிட நாகரிகத்தின் தொன்மையும் மேன்மையும், ஆரியர் வேதங்களில் திராவிடர்களைப்பற்றி இழித்துக் கூறியதும் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன. இந்நூல் யாவரும் படித்தற்குரியது.

இதன் விலை 6 அணாதான்.

கிடைக்குமிடம்:-

முத்தமிழ் நிலையம்,
75, வாதா முத்தியப்பன் தெரு,
சென்னை

o o

### 'வருங்காலத் தமிழகம்'

'வருங்காலத் தமிழகம்' என்ற நூல் தோழர் கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி. அவர்களால் இயற்றப்பட்டது. பண்டைத் தமிழரின் சீரிய வாழ்வும், சங்க காலத் தமிழின் மேன்மையும், பிற்காலத்தே தமிழ் சீர்குலைந்ததும், தமிழகத்தின் தொன்மையும், திராவிடத்தின் பரப்பும் உலகமொழிகளில் தமிழ் பெறுவதற்குரிய இடமும், தமிழகம் [illegible] குரிய வருங்காலத் திட்டமும் இந்நூலில் எளிய இனிய நடையில் தெளிவு

## பிரகாசம் தலைமைக்குச் சாவுமணி

28-2-47ல் சென்னை பாங்க்வெட்டிங் ஹாலில் நடைபெற்ற காங்கிரஸ் சட்டசபைக் கட்சியினர் கூட்டத்தில் பிரகாசம் மந்திரிசபை மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, உடனே தோழர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சட்டசபைக் காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

---

பட விளக்கப்பட்டுள்ளன. 'குமரிக்கண்டம்' 'தமிழ் வாழ்வு' முதலிய நன்னூல்களை இயற்றிய தோழர் அப்பாதுரை அவர்களால் ஆக்கப்பட்ட இந்நூல் தமிழர்க்குப் பெரிதும் பயன்படும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை.

இதன் விலை ரூபாய் ஒன்று.

கிடைக்குமிடம்:-

தமிழர் பதிப்பகம்,
81, லிங்கசெட்டித் தெரு,
சென்னை 1.

o o

### 'தமிழ்ச் சுடர்'

'தமிழ்ச்சுடர்' என்ற மாத வெளியீடு தோழர் மீ. சு. இளமுருகனார் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டது. வித்துவான் மு. வரதராசனார் எம். ஓ. எல்., தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எம். ஏ., வித்துவான் சி. இராமசாமி முதலிய பல அறிஞர்கள் எழுதிய சீரிய கட்டுரைகளும், சிறு கதைகளும், கவிதைகளும் 'தமிழ்ச்சுடரை'ப் பெருமைப்படுத்துகின்றன.

இதன் விலை தனிப்பிரதி 6 அணா.

கிடைக்குமிடம்:-

தமிழ்ச்சுடர் பதிப்பகம்,
பெரியகுளம், (மதுரை மாவட்டம்)

o o

### பொன்னி

'பொன்னி' என்ற மாத வெளியீடு தோழர் முருகு சுப்பிரமணியன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டது. கவிஞர் பாரதிதாசன், அவர்களின் கவிதையும், தளபதி சி. என். அண்ணாதுரை அவர்களின் 'வாழ்வில் விழா' என்ற கட்டுரையும், பொன்னிக்கு ஓர் தனிச் சிறப்பைத் தந்துள்ளன. மற்றும் வி. சு. திருநாவுக்கரசு, கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி., கலைச்செல்வி ம. ப. பெரியசாமி முதலிய பல அறிஞர்களால் எழுதப்பட்ட சீர்திருத்த கருத்துக்களடங்கிய கட்டுரைகளும், சிறு கதைகளும், கவிதைகளும் பொன்னியில் மிளிர்கின்றன. சீரிய முறையில் வெளியிடப்படும் பொன்னி தமிழ்நாட்டினர்க்கு ஓர் நல் விருந்து என்பது உறுதி.

இதன் விலை தனிப்பிரதி 8 அணா.

கிடைக்குமிடம்:-

கமலா பிரசுராலயம்,
59, பிராட்வே, சென்னை.

o o

### 'பிரஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை'

இந்நூல் பிரஞ்சிந்திய மக்கள் முழு உரிமை பெறுவதற்குத் தட்டி எழுப்பும் முறையில் எழுதப்பட்டுள்ளது.

கிடைக்குமிடம்::

பிரஞ்சிந்திய கம்யூனிஸ்ட் கட்சி,
புதுச்சேரி.

o o

### "கருஞ்சட்டைப்படை வழிநடைப்பாடல்"

இந்நூல் திருவத்திபுரம் தோழர் வித்துவான் மாவண்ணா. தேவராசன் அவர்களால் இயற்றப்பட்டது. திராவிடர் கழகக்கொள்கைகளைப் பல பாக்கள் வாயிலாகக் காட்டுகின்றார். தோழர் தேவராசன். இனிய எளிய நடையில் வீர உணர்ச்சியூட்டும் முறையில் பாக்கள் இயற்றப்பட்டுள்ளன. க. ச. படையினர் பாடுதற்கு ஏற்ற பாடல்கள்.

இதன் விலை 8அணா.

கிடைக்குமிடம்:-

ஸ்ரீ இலட்சுமி நூல் பதிப்பகம்,
திருவத்திபுரம் (வ. ஆ)

## பெயர் மாற்றம்

தஞ்சை ஜில்லா நாகை தாலுக்கா ஆலிவலம் தோழர் தே. ச. சண்முகம் அவர்கள் தமது பெயரை தே. ச. எழில் என்று மாற்றிக்கொண்டதின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

---

Edited, Printed, and Published by N Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherrystreet, ERODE